DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 148/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : கணேசன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 14.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 14th **August 2025.**

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் பாரதிநகரில் குடியிருந்து வருகிறேன். நான் தறி செட்டில் கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 சரஸ்வதி எனது மனைவி. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கு சம்பவத்தின்போது எனது மகள் 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். 2011–2012ம் வருடம் ஒரு நாள் மாலை சுமார் 7 மணியளவில் எதிரி எனது மகள் துர்காதேவியிடம் எதிரி தன்னை திருமணம் செய்யவேண்டும், இல்லையென்றால் கொலை செய்துவிடுவேன் என்று தகராறு செய்தார். அதன்பின்னர் நான் 7.15 மணிக்கு வீட்டிற்கு போனபோது என்னுடைய மனைவி என்னிடம் நடந்த விபரத்தை கூறினார். காவல்நிலையம் சென்று நான் புகார்

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனது மகள் பள்ளிக்கூடம் போகும்போதும், வரும்போதும் எதிரி என்ன செய்வார்கள் என்றால் எனது மகள் பள்ளிக்கூடம் போகும்போதும், வரும்போதும் எதிரி கிண்டல் செய்வார். ஏற்கனவே வேறு ஏதேனும் புகார் கொடுத்தீர்களா என்றால் இந்த வழக்கில் புகார் அளிப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்தபுகார் விசாரணையில் என்ன நடந்தது என்றால் எதிரியை கூப்பிட்டு சத்தம் போட்டார்கள். எதிரியின் டார்ச்சர் தாங்கமுடியாமல் எனது மகள் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு நாங்கள் எனது மகளுக்கு திருமணம் செய்துவைத்தோம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 148/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : சரஸ்வதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 14.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 14th **August 2025.**

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் தறி செட்டில் கூலி வேலை செய்து வருகிறேன். அரசுதரப்பு பட்டியல் சாட்சி 3 துர்காதேவி எனது மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது மகள் துர்காதேவி 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும்போது எதிரி எனது மகள் பின்னால் சென்று தகராறு செய்துகொண்டேஇருந்தார். எதிரியின் செயல் தாங்கமுடியாமல் எனது மகளின் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு அதன்பின்னர் எனது மகளுக்கு திருமணம் செய்துவைத்தோம். சுமார் 9 வருடங்களுக்கு முன்பு இரவு 8-8.30 மணியளவில் நானும், துர்காதேவி மற்றும் எனது மற்ற இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே காம்பவுண்ட் பக்கம் வந்து நின்று எதிரி எட்டிப்பார்த்தார். நாங்கள் சத்தம் போட்டோம். எதிரி

போய்விட்டார். எனது கணவர் இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.